
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**768**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர்

**52**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# மறுமலர்ச்சி காலத்தில் தமிழ்நாடு!

ஓவியம் : ரவி பேலட்



ஐரோப்பாவில் 15, 16- ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த கலை, இலக்கிய மீட்டுருவாக்கத்தை 'மறுமலர்ச்சி' என்பர். இந்திய வரலாற்றில் பிரிட்டிஷார் ஆட்சியின் விளைவாக, 19-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த அறிவுப் புரட்சியையும், அரசியல், பொருளாதார, சமூக, சமய களங்களில் நிகழ்ந்த மாற்றங்களையும் குறிப்பாக, மக்கள் மனங்களில் ஏற்பட்ட எழுச்சியையும் 'மறுமலர்ச்சி' என்று குறிப்பிடலாம். வங்காளத்தின் ராஜாராம் மோகன் ராய், 'ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சி போலவே இந்தியாவிலும் மறுமலர்ச்சி தோன்றியது என்று நினைக்கிறேன்' என எழுதினார்.

பெரும்பாலும், இந்திய மறுமலர்ச்சி வங்காளத்து மண்ணின் நிகழ்வுகளை அடியொற்றியே ஆய்வு செய்யப்படுகிறது. இந்தியாவின் பிறபகுதிகளைவிட, வங்காளத்து மண்ணில்தான் முதன்முதலில் மறுமலர்ச்சிக் கருத்துகள் பேசப்பட்டன என்பதே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது. வங்காள மறுமலர்ச்சிக்கு வித்திட்ட காரணங்களை வரலாற்று ஆய்வாளர் கு.நம்பி ஆரூரன் தன்னுடைய **'தமிழ் மறுமலர்ச்சியும் திராவிட தேசியமும்'** எனும் நூலில் விளக்குகிறார்.

### பக்சர் போரின் தாக்கம்

இந்திய மறுமலர்ச்சி முதன்முதலில் பேசப்பட்டதற்கு முதற்காரணம் பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவின் பிறபகுதிகளை விட, வங்காளத்தில்தான் அதிக காலம் ஆட்சி செய்தார்கள். 1764-ஆம் ஆண்டில் முடிவுற்ற பக்சர் போருக்குப் பின்னர், வங்காள மண்ணில் ஆங்கிலேயர் ஆதிக்கம் தொடங்கியது. 1799-இல் திப்புசுல்தானை வீழ்த்திய பின்னரே, தென்னிந்தியா, ஆங்கிலேயர்கள் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதனால் பிரிட்டிஷ் ஆட்சியின் தாக்கம், வங்காளத்தில் அதிகமாகவே காணப்பட்டது.

பிரிட்டிஷ் இந்தியாவின் அதிகாரப்பூர்வ தலைநகராக 1911-இல் டெல்லி மாற்றப்படும் வரையில், கொல்கத்தாவே இந்தியாவின் தலைநகரமாக இருந்தது. இந்தியா போன்ற பரந்து விரிந்த ஒரு நாட்டின் தலைநகரமாக இருந்தால், அதற்குப் பல நன்மைகள் அமைவது இயல்பு. சென்னையிலோ, மும்பையிலோ இருந்த வாழ்க்கைமுறை, வசதி வாய்ப்புகளைவிட கொல்கத்தாவில் ஒரு படி அதிகமாகவும் இருக்கும் என்பதும் இயல்புதான். அதிகார மையத்துக்கு அருகிலே இருந்த வங்காளிகள் அந்த நெருக்கத்தின் பயனை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டார்கள்.

படித்த வங்காளிகள், அரசுப் பணிகளில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் நெருங்கிப் பழகுவதற்கு வாய்ப்புகள் எளிதில் உருவாகின. வங்காளிகளின் நடை, உடை, பழக்கவழக்கங்கள் ஆகியன மெல்ல மெல்ல மாறத் தொடங்கின. மேலைநாட்டு வாழ்க்கைமுறை கொல்கத்தாவில் படித்தவர்களிடையே பரவத் தொடங்கியது.

சமூக அரசியல் அமைப்புகள், இந்தியாவில் முதன்முதலில் வங்காளத்தில்தான் தோன்றத் தொடங்கின. மும்பையிலும், சென்னையிலும், அதன்பின்னர்தான் உருவாகும் நிலை ஏற்பட்டது. வங்காளத்தில்தான் முதன்முதலில் 1837-இல் 'ஜமீன்தார் அசோசியேஷன்' என்ற பெயரில் ஓர் அமைப்பு தொடங்கப்பட்டது. பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு 1952-இல் மும்பையில் 'பம்பாய் அசோசியேஷனும்' சென்னையில் 'மெட்ராஸ் நேடிவ் அசோசியேஷனும்' தொடங்கப்பட்டன.

இதழியல் துறை வளர்ச்சியிலும், வங்காளமே முன்னோடியாய் விளங்கியது. **'தி பெங்கால் கெசட்'** என்ற கல்கத்தா அரசின் கெஜட் முதன்முதலாக 1780-இல் வெளியிடப்பட்டது. **'தி மெட்ராஸ் கூரியர்'** 1785-இல் சென்னையில் உருவானது. பம்பாயில் 1789-இல் **'தி பம்பாய் ஹெரால்டு'** என்னும் இதழ் வெளிவந்தது. இவை அதிகாரப்பூர்வ அரசு இதழ்கள். இந்தியாவில் முதன்முதலில் ஆங்கிலத்தில் **'தி பெங்கால் கெசட்'** என்ற பெயரில், வாரச் செய்தி ஏடு கங்காதர் பட்டாச்சார்யா என்பவரால் 1816-இல் வெளியிடப்பட்டது.

முதன்முதலில் சென்னையில் 1844-இல் காசுலு இலட்சுமிநரசு செட்டி என்பவர் ஆங்கில இதழ் ஒன்றை **'கிரசன்ட்'** என்ற பெயரில் வெளியிட்டார்.

இந்திய மொழிகளில் முதன்முதலில் வங்க மொழியில்தான் **'சம்பாத் கவுமுதி'** என்ற வார ஏடு 1821-இல் தொடங்கப்பட்டது. சென்னை மாகாணத்தில் **'சுதேசமித்திரன்'** என்ற ஒரு தமிழ் வார இதழ் 1882-இல் வெளியாயிற்று. தொடர்ந்து பல செய்தித்தாள்கள் கொல்கத்தாவிலிருந்து வெளியாயின. தொடக்க நாள்களில் செய்தி ஏடுகளுக்கான அஞ்சல் கட்டணம் கொல்கத்தாவில் மிகக் குறைவு. சென்னையிலும் மும்பையிலும் அஞ்சல் கட்டணம் மிக அதிகம். 1854-இல் தான் இந்தியாவில் எல்லா ஊர்களிலும் அஞ்சல் கட்டணம் ஒரே முறையாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

பொருளாதார நடைமுறைக் கூறுகளும் இந்திய மறுமலர்ச்சியின் வேகத்தை முடிவு செய்வதில் பெரும்பங்கு ஆற்றின. கொல்கத்தாவின் இதழியல் வளர்ச்சிக்கு, அங்கே அப்போது முன்னிலையில் இருந்த பெரிய வணிக நிறுவனங்கள், விளம்பரங்கள் மூலமாக பெரிய அளவில் உதவியதும், ஒரு காரணம் ஆகும். இதழ்களை அஞ்சலில் அனுப்புவதற்கான கட்டணச் செலவை ஈடுசெய்ய விளம்பரங்கள் அவர்களுக்கு உதவியாக இருந்தன.

> **"நம்பி ஆரூரன் 20-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் தென்னிந்தியாவில் ஒரு புத்தெழுச்சி கிளர்ந்தெழுந்தது என்கிறார். அதற்குக் காரணம், திராவிட தேசியம் என்ற இன உணர்வே என்கிறார் அவர்."**

### வங்கத்தின் பொருளாதாரம்

பொருளாதார மாற்றங்கள் தொழில் வளர்ச்சியை வங்காளத்திலும், பம்பாயிலும் முன்னதாகவே கொண்டு வந்துவிட்டன. சென்னை, இந்த மாற்றங்களைப் பயனுள்ளவையாக மாற்றிக்கொள்வதில், சிறிது பின்தங்கி விட்டது. சென்னை மாகாணத்தின் பொருளாதாரம் வேளாண்மை சார்ந்ததாகவே இருந்தது. பெரும்பாலும் வேளாண்மையும் அப்படி ஒன்றும் பாராட்டும்படியாக இல்லை. வணிக நிலையிலும் மற்ற இரு மாகாணங்களைப் போல வளர்ந்த நிலையில் இல்லை. தொழில் துறையிலும் சென்னை மிகவும் பின்தங்கியே இருந்தது'. பின்னாளில் ஒரு புதிய தொழில் வளர்ச்சித் துறையை அமைத்தது என்றாலும்கூட, இருபதாம் நூற்றாண்டின் தொடக்க பத்தாண்டுகள் வரை அங்கே தொழில் வளர்ச்சியில் பெரிய முன்னேற்றம் ஏதும் இல்லை.

ஆங்கிலக் கல்வியிலும் சென்னை பின்தங்கியே இருந்தது. கொல்கத்தாவில் இந்துக் கல்லூரி 1817-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது. சென்னையிலோ உயர்நிலைப் பள்ளியே 1841-இல்தான் தொடங்கப் பெற்றது. 1853-ஆம் ஆண்டு வரை கல்லூரிகள் தொடங்கப் பெறவில்லை

1828-இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் டைரக்டர்கள் குழு, சென்னையில் இந்தியர்களுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி அளிப்பதற்கும், ஐரோப்பிய இலக்கியங்களைக் கற்பிப்பதற்கும் தக்கமுயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று பிரிட்டிஷ் அரசுக்குப் பரிந்துரைத்தது.


"மும்பை, வங்காளத்துடன் ஒப்பிட சென்னை மாகாணத்தில் பள்ளி மாணவர்கள், எண்ணிக்கையிலும், மொழித் திறனிலும் தரம் குறைந்தே இருந்தார்கள்" என்று 1854-இல் கம்பெனியின் கல்விக்குழு தன் கவலையை அரசுக்குத் தெரிவித்திருந்தது".

ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்டு வங்காளத்து மாணவர்கள், இந்தியாவின் வேறெந்த மாநிலத்தையும்விட, உயர்ந்த கல்வித் தரம் பெற்று விளங்கினார்கள். இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகள் வரையுங்கூட சென்னை மாகாணத்தில் மறுமலர்ச்சிக்கான சரியான முயற்சிகள் மேற்கொள்ளப்படவே இல்லை.

வங்காளத்து இந்துக்கள், மறுமலர்ச்சிச் சிந்தனைகளை எளிதாக ஏற்றுக் கொண்டமைக்கு முக்கிய காரணம் வங்காளத்து மக்களின் மனப்பக்குவமே ஆகும். சென்னையோடு ஒப்பிடுகையில், மக்கள்தொகையில் வங்காளத்தில் முஸ்லிம்களின் விழுக்காடு அதிகம். சென்னையில் முஸ்லிம்கள் குறைவு. இந்துக்களில் கீழ்த்தட்டு மக்களில் இருந்து கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்கள், பெரும்பாலும் சென்னை மாகாணத்தின் கடலோரத் தென்மாவட்டங்களில்தான் வாழ்ந்தார்கள். இந்துக்கள் பெரும்பான்மை என்பதால், அவர்கள் பழைய மரபுகள் பழக்கவழக்கங்களில் ஆழ்ந்து இருந்தார்கள். உண்மையில் கிறிஸ்தவர், இஸ்லாமியருடன் எத்தகைய மோதல்களும் ஏற்பட வாய்ப்பு இல்லாமற் போயிற்று. இதன் காரணமாய் தமிழ்நாட்டை உள்ளடக்கிய தென்னிந்தியா பின்தங்கி இருந்தது என்று கூறும் நம்பி ஆரூரன் 20-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் தென்னிந்தியாவில் ஒரு புத்தெழுச்சி கிளர்ந்தெழுந்தது என்கிறார். அதற்குக் காரணம், திராவிட தேசியம் என்ற இன உணர்வே என்கிறார் அவர்.

...குரல் ஒலிக்கும்

## பேச வைத்த பெரியார்!




**த**ந்தை பெரியாரால் பெயர் சூட்டப்பட்டவர் புலவர் செந்தலை கவுதமன். அதுமட்டுமல்ல 'பெரியாரைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாள்' என்ற கொள்கையைக் கொண்டு இருப்பவர். அத்தகைய பெரியாரியப் பற்றாளரான செந்தலை கவுதமன், பெரியார் - பாவேந்தர் பாரதிதாசன் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் - வே.ஆனைமுத்து ஆகியோர் குறித்து எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, சூலூர் நகர திராவிட இயக்கத் தமிழர் பேரவை 'பேசவைத்த பெரியார்!' என்ற தலைப்பில், நூலாக வெளியிட்டுள்ளது.

பெரும் செல்வந்தர் குடும்பத்தில் பெரியார் பிறந்தது தொடங்கி, சமூக விடுதலைக்காக வாழ்நாளெல்லாம் அவர் ஆற்றிய பங்களிப்பில் புதைந்து கிடக்கும் அரிய செய்திகள் பலவற்றை, புலவர் இந்நூலில் தொட்டிருக்கிறார். அதேபோல பாவேந்தரின் வாழ்க்கையை, கவிதைகளை, சிந்தனைகளை மூன்றே கட்டுரைகளில் மிகச் செறிவாக விளக்கிய பாங்கு வியப்பைத் தருகிறது.

தமிழ்நாட்டின் சிந்தனை வரலாற்றில் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்திய அண்ணாவின் வாழ்வு, பணிகள் மட்டுமின்றி, அண்ணாவின் பேச்சழகு, சொல்லாற்றல், கருத்துவளம் ஆகியவற்றைச் சான்றுகளோடு சுவைபட விவரித்திருக்கிறார். அதேபோல கலைஞர், தன் தொடக்க காலத்தில் கோவையில் தங்கி ஆற்றிய பணிகளை இந்நூலில் அழகாகப் படம்பிடித்துள்ளார். இறுதியாக, ஆனைமுத்து அவர்களுக்கு புலவர் செந்தலை கவுதமன் தரும் அறிமுகம் அவசியம் வாசிக்க வேண்டியது.

நூலைப் பெற: 95431-32323

விலை: ரூ.250

## ஃப்ளாஷ்பேக்



## தஞ்சையில் தளபதி!



சி.கே.அன்பு

1999-ஆம் ஆண்டு, கழக வளர்ச்சி நிதி திரட்டவும், செயல்வீரர்களை உற்சாகப்படுத்தவும், தமிழ்நாடு முழுக்க சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள். தஞ்சாவூர் வந்த பொழுது சங்கம் விடுதியில் தலைவர் அவர்களை வரவேற்று மகிழ்ந்தேன் அப்போது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**- சி.கே.அன்பு,**
**தி.மு.க. நகரச் செயலாளர், கீழ்பென்னாத்தூர் தொகுதி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### நாடு முழுவதும் மக்கள் ஆதரவு!

1965-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் அரசுத்துறைகள், கல்வி நிறுவனங்கள் அனைத்திலும் முழுவதுமாக இந்தியைக் கொண்டுவர வேண்டும் எனத் திட்டமிட்டனர். எந்தெந்த துறைகளில், இந்தித் திணிப்பை வேகமாக்கலாம் என்பதை ஆராய்ந்து, அறிக்கையைத் தர உருவாக்கப்பட்ட 'கேர் குழு' தனது திட்டத்தைத் தாக்கல் செய்தது. அந்த அறிக்கைக்கு எதிராக, கழகம் கடும் கண்டனத்தைத் தெரிவித்தது. நாடு முழுவதும் இந்தித் திணிப்புக்கு எதிராக, ஆதரவு திரட்டினார், பேரறிஞர் அண்ணா.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131